**பதுளை பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 08 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதுளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 46,710 கூட்டுத்தொகைக்காக அட்டுறு செலவுகளை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 42,000 தொகையான நிலுவை வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 05 நிலையான சொத்துக்களின் ரூபா 41,660,573 கூட்டுத்தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,717,000 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 118,779,193 தொகையாகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,301,922 ஆக இருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக விதிக்) கோவை | |
| | (i) 180 ஆம் விதி | பிணை வைக்கவேண்டிய 10 உத்தியோகத்தர்களினால் ரூபா 37,000 தொகை பெறுமதியான பிணை வைத்திருக்கவில்லை. |
| | (ii) 146 ஆம் விதி | நிதி சேகரிக்கும் விடயம் வெளிக்கள தொழிலாளர்கள் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. |
| | (iii) 164 ஆம் விதி | நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கணனி மென்பொருள் அறிக்கை மற்றும் அச்சுப் பிரதிகள் இடையே மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளும் விதமாக அகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| | (iv) 218 ஆம் விதி | 2015 ஆண்டிற்காக காணிகள் கட்டிடங்கள் கணிப்பீட்டு விடயம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | சபையில் கடமையாற்றிவிட்டு இடமாற்றம் பெற்றுச்சொன்றுள்ள ஓய்வுபெற்றுள்ள அலுவலர் களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 13,326 தொகை பெறுமதியான 07 கடன் மீதிகளை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (இ) | 2009 செப்டம்பர் 18 ஆந் திகதி PF/437 ஆம் இலக்க அரச நிதிகள் சுற்று நிருபம் | சபையினால் 04 வாகனங்களுக்காக ரூபா 151,006 காப்புறுதிப் பாதுகாப்பு பெற்றுக்கொள்ளும் போது காப்புறுதி முகவர் ஒருவர் மூலமாக பெறப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் 23‘அ’ ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய தொழிற் முயற்சிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,062,820 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,062,334 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

-----------------------------------------------------------------

(அ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதேச சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 774,497 தொகை ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 28% மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியின் போதும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் மூன்று செலுத்துகை டவர்கள் தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டு கட்டணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,059,104 தொகையாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

உள்ளுராட்சி ஊழியர்களின் ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 562,002 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை அனுப்பப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீடு, வருமானங்கள் மற்றும் செலவுகளின் கட்டுப்பாட்டில் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

--------------------------------------------------

மீளாய்வாண்டின் போது வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

2015 ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------

நடைமுறை ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) இருப்புக் கட்டுப்பாடு